Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 262/2022** |
| Deposition of witness for | :: | **PW. 1** |
| Name | :: | **அழகேஸ்வரி** |
| Husband's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the
day of 2026

---

**1, 2 எதிரிகள் இறப்பு. 3, 4 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**07.04.2026**

**முதல் விசாரணை**:

1. நான் பாலவநத்த்தில் குடியிருந்து தீப்பெட்டி தொழிற்சாலையில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் 1வது எதிரியான செல்வக்குமார் பங்காளி உறவு ஆவார். மற்ற மூன்று எதிரிகள் செல்வகுமாரின் உறவுக்காரர்கள் ஆவார்கள். கடந்த 24.02.2021ம் தேதி இரவு சுமார் 09.00 மணியளவில் நான் சாப்பிட்டுவிட்டு இரவு எனது வீட்டில் இருந்தபோது செல்வக்குமார் எனது வீட்டிற்கு வெளியே நின்று எனது வீட்டின் கதவை தட்டிக்கொண்டே எனது கணவரை அசிங்கமாக திட்டினார். செல்வக்குமார் எனது கணவரை தேவடியா பயலே என்று திட்டினார். நான் வெளியே வந்து என்னவென்று கேட்டபோது என்னை நான் அப்படித்தாண்டி பேசுவேன் என்று வாடி போடி என்று திட்டினார். எதற்காக எனது கணவர் செல்வக்குமாரின் அப்பாவை பார்க்க சென்றார் என்று சொல்லி என்னை திட்டினார். உடனே நான் எனது கணவருக்கு போன் செய்து செல்வக்குமார் அவருடைய அப்பாவை அடித்தால் எதற்காக நீங்கள் சென்று பார்க்கிறீர்கள் என்று எனது கணவரை சத்தம்போட்டேன். எனது கணவர் எனது வீட்டிற்கு அன்று இரவு 10.00 மணியளவில் வந்த

உடனே நடந்த பிரச்சனை பற்றி செல்வகுமாரிடம் எனது கணவர் கேட்டபோது செல்வகுமார் எனது கணவரை அடித்துவிட்டார். பின்னர் எனது மச்சான் குருசாமி வந்து சண்டையை விலக்கிவிட்டார்.

2. பின்னர் மறுநாள் காலையில் நான் சமையல் அறையில் வேலை செய்து கொண்டிருந்தபோது சந்துரு என்பவர் செல்வகுமாரின் வீட்டிற்கு வந்திருந்தார். அப்போது அவர்கள் பேசும் சத்தம் எனக்கு கேட்டது. சந்துருவிடம் செல்வகுமார் நான் தான் எனது கணவரை வரசொல்லி பிரச்சனை செய்தோம் என்று சொல்லி கொண்டிருந்தார். அப்போது மொத்தம் 6 நபர்கள் காரில் வந்து செல்வகுமாரிடம் பிரச்சனை பற்றி கேட்டு கொண்டிருந்தார்கள். அதில் ஆஜர் எதிரிகளான சமயன் மற்றும் முத்துமாணிக்கமும் இருந்தார்கள். நான் வெளியே நின்று அவர்கள் பேசுவதை கேட்டு கொண்டு இருந்தேன். அப்போது செல்வக்குமார் என்னை பார்த்து நேற்று உனது கணவரை வரசொன்ன மாதிரி இன்றைக்கு வரசொல் பார்ப்போம் என்று கூறினார். அப்போது பேசி கொண்டு இருக்கும்போதே எனது கணவர் அங்கு வந்துவிட்டார்.

3. எனது கணவரை ஆஜர் எதிரிகள் சமையன், நாகராஜ் மற்றும் இவ்வழக்கில் இறந்துபோன நபர்களான செல்வக்குமார், கோழிகூடு ஆகியோர்கள் எனது பக்கத்து வீட்டு சுவற்றோடு அமுக்கி பிடித்து கொண்டார்கள். அவர்கள் நான்குபேரும் ஒரு கையில் எனது கணவரை பிடித்து கொண்டு மற்றொரு கையால் நான்கு பேரும் எனது கணவரை அடித்தார்கள். நானும், எனது குழந்தைகளும் தடுக்க முயற்சி செய்தோம் ஆனால் முடியவில்லை. பின்னர் எனது மாமனார் லெட்சுமணனும், எனது அக்கா முத்து ஆகியோரும் அங்கு வந்து சண்டையை விலக்கிவிட்டார்கள். அப்போது செல்வகுமார் விறகு கட்டையை வைத்து எனது கணவரின் தலையில் அடித்துவிட்டார், மற்றும் எனது கணவரின் கை பெருவிரலை முறுக்கி ஒடித்துவிட்டார்.

4. அப்போது நானும், எனது அக்காவும் சண்டையை விலக்கிவிட சென்றோம். என்னையும், எனது அக்காவான முத்துவையும் அடித்தார்கள். என்னை முத்துமாணிக்கம் அருகே இருந்த சிறிய கட்டையை வைத்து தலையில் அடித்தார், எனது அக்கா முத்துவை சமையன் தலையிலும், இடது கையிலும் கட்டை வைத்து அடித்தார். பின்னர் எனது கணவர்

மயங்கிவிட்டார். அதனால் அவரை அழைத்து கொண்டு பாலவநத்தம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கிருந்து எங்களை விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு போக சொன்னார்கள். நான், எனது கணவர், எனது அக்கா மற்றும் மாமனார் லெட்சுமணன் அகியோர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றோம். மேற்படி சம்பவத்தில் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. எனது கணவருக்கு வெளிப்படையாக எந்த காயமும் இல்லை.

5. 26.02.2021ம் தேதி மருத்துவமனையில் இருந்து வந்தபிறகு நான் அருப்புக்கோட்டை தாலுகா காவல் நிலையத்திற்கு நானும், எனது மச்சான் குருசாமியும் சென்று புகார் கொடுத்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மற்றும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது. **(புகார்மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி புகாரை நான் சொல்ல சொல்ல எனது வழக்கறிஞர் எழுதி கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**3, 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சாட்சி முத்துக்குமார் எனது கணவர் என்றால் சரிதான். சாட்சி லட்சுமணன் எனது அண்ணன் என்றால் சரிதான். சாட்சி முத்து எனது அக்கா என்றால் சரிதான். எதிரி செல்வக்குமாரின் வீடு எனது வீட்டை அடுத்து உள்ளதா என்றால் இல்லை. எனது வீட்டிற்கும் செல்வகுமார் வீட்டிற்கும் இடையே மற்றொருவர் வீடு உள்ளது. சம்பவத்தன்று 6 நபர்கள் காரில் வந்ததாக நான் முதல் விசாரணையில் கூறிய விவரத்தினை போலீஸ் விசாணையின் போது நான் கூறினேனா என்றால் கூறினேன். மேற்படி 6 நபர்களும் என்னை அடித்தார்களா என்றால் இல்லை. அதில் 3 நபர்களும், செல்வக்குமாரும் தான் எங்களை அடித்தார்கள். எனது கணவரையும், எனது மாமனார் மற்றும் எனது அக்காவையும் கட்டையால் எதிரிகள் தாக்கியதாக நான் முதல் விசாரணையில் கூறிய விவரத்தினை நான் போலீசார் விசாரணையின் போது கூறினேனா என்றால் கூறினேன். நான் முதல் விசாரணையில் எனது கணவரின் பெருவிரரை முறுக்கி உடைத்ததாக கூறிய விவரத்தினை போலீசார் விசாரணையின் போது கூறினேனா என்றால் எனது மாமனாரின் பெருவிரலை தான் முறுக்கி உடைத்தார்கள். எனது கணவரை அடிக்க மட்டும் தான் செய்தார்கள்.எனது கணவருக்கு வெளிக்காயம் எதுவும் இல்லை.

2. 24.02.2021ம் தேதி எனது கணவரை அசிங்கமாக திட்டியதாகவும், என்னை மறுநாள் வாடி போடி என்று திட்டியதாக நான் முதல் விசாரணையில் கூறிய விவரத்தினை போலீசார் விசாரணையின் போது கூறினேனா என்றால் கூறியுள்ளேன். வழக்கு சம்பவத்திற்கு முன்பிலிருந்தே எனது குடும்பமும் செல்வக்குமார் குடும்பமும் பேசிக்கொள்ளமாட்டோம் என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் தான் செல்வக்குமாரிடம் வாய்தகராறு செய்தேனா என்றாலும், அவர் பதில் தான் கூறினார் என்றாலும், வேறு எந்த பிரச்சனையும் நடக்கவில்லை என்றாலும், சரியல்ல. எனது பெரியமாமனார் லட்சுமணன் வீடுஎனது வீட்டில் இருந்து எவ்வளவு தொலைவில் அமைந்துள்ளது என்றால் 8 வீடு தள்ளி அமைந்துள்ளது. எனது அக்கா முத்து எனது பெரியமாமனார் லட்சுமணன் வீட்டில் தான் குடியிருந்துவருகிறார். 24.02.2021ம் தேதி எவ்வளவு நேரம் எனக்கும் செல்வக்குமாருக்கும் வாய்தகராறு நடந்தது என்றால் சுமார் 30 நிமிடம் நடந்தது.

3. மறுநாள் 25.02.2021ம் தேதி எவ்வளவு எனது கணவருக்கும், எதிரிகளுக்கும் சண்டை நடந்தது என்றால் சுமார் 45 நிமிடங்கள் நடந்தது. மறுநாள் 25.02.2021ம் தேதி காலையில் முதலில் செல்வக்குமார் தான் பேசினார் என்றால் சரிதான். அப்போது சந்துரு என்பவர் அருகில் இருந்தார் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் (3 மற்றும் 4 எதிரிகள்) வாய்தகராறு ஆரம்பித்து எவ்வளவு நேரம் கழித்து வந்தார்கள் என்றால் சுமார் 15 நிமிடங்கள் கழித்து வந்தார்கள். மேற்படி வாய்தகராறு நடந்த போது எனது கணவர் வீட்டில் இல்லை என்றால் சரிதான். ஆரம்பித்து சுமார் 3 நிமிடத்தில் எனது கணவர் அங்கு வந்துவிட்டார். எனது கணவர் வரும் போதே அவருக்கு காயம் இருந்தது என்றால் இல்லை. நானும், எனது குடும்பத்தார்களும் சேர்ந்து செல்வக்குமாரை அடித்து காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல.

4. செல்வக்குமாரை நாங்கள் அடித்த பிறகுதான் தற்செயலாக 3, 4 எதிரிகள் செல்வக்குமார் வீட்டிற்கு வந்தார்கள் என்றால் சரியல்ல. 3, 4 எதிரிகள் சண்டையை விலக்கிவிட்டார்கள் என்றால் சரியல்ல. நானும், எனது மாமனார் மற்றும் எனது அக்கா ஆகியோர்கள் சேர்ந்து கம்பை வைத்து செல்வக்குமாரை தாக்க முற்பட்ட போது தவறுதலாக எங்கள் மீது

விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது புகாரில் எந்த எதிரி எந்த ஆயுதத்தை பயன்படுத்தி அடித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். செல்வக்குமாரை நாங்கள் தாக்க முற்பட்ட போது அதில் எங்களுக்கு ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எந்த குற்றச் செயலிலும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 262/2022** |
| Deposition of witness for | :: | **PW. 3** |
| Name | :: | **லட்சுமணன்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**1, 2 எதிரிகள் இறப்பு. 3, 4 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**
**07.04.2026**
**முதல் விசாரணை**:

1. நான் பாலவநத்ததில் குடியிருந்து வருகிறேன். கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்பு புரட்டாசி மாதம் ஒருநாள் இரவில் செல்வக்குமார், எனது தம்பி மகனான முத்துக்குமாரை அடிக்க முற்பட்டபோது எனது மகன் குருசாமி அங்கு சென்று சண்டையை விலக்கிவிட்டார். பின்னர் இருவரும் வீட்டிற்கு சென்றுவிட்டார்கள். மறுநாள் காலை 08.00 மணிக்கு மேல் எனது தம்பி மகனான முத்துக்குமாரை 6 நபர்கள் சேர்ந்து அடிக்கிறார்கள் என்று எனது தம்பி மகனின் குழந்தைகள் என்னிடம் வந்து கூறினார்கள். உடனே நான் முத்துக்குமாரின் வீட்டிற்கு சென்று பார்த்தபோது அங்கு தெருவில் வைத்து ஒருவருக்கொருவர் அடித்து கொண்டிருந்தார்கள். 4 நபர்கள் முத்துக்குமாரை அடித்து கொண்டிருந்தார்கள். அவர்கள் வெளியூர்காரர்கள் என்பதால் அவர்களின் பெயர் எனக்கு தெரியவில்லை. ஆஜர் எதிரிகள் இருவரும் அன்று முத்துக்குமாரை கம்பால் அடித்தார்கள். நான் விலக்க சென்றபோது அங்கிருந்த யாரோ என்னை தலையில் அடித்துவிட்டார்கள். நான் உடனே மயங்கிவிட்டேன். அங்கிருந்த நபர்களில் ஒருவர் எனது இடது கை பெருவிரலை உடைத்துவிட்டார். கூட்டத்தில் யார் உடைத்தார்கள் என்று

எனக்கு சரியாக தெரியவில்லை. பின்னர் என்னை மருத்துவமனையில் அனுமதித்தார்கள். அன்று மதியம் 02.00 மணிக்கு மேல் தான் எனக்கு மயக்கம் தெளிந்தது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**3, 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. அழகேஸ்வரிக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, நான் மயங்கிவிட்டேன். முத்துக்குமாருக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்றால் சண்டையில் மல்லுகட்டும்போது காயம் ஏற்பட்டது. சம்பவம் நடந்தபோது அருகில் இருந்த வீட்டுக்காரர்கள் அனைவரும் பிரச்சனை பார்த்தார்கள் என்றால் சரிதான். செல்வக்குமாரை எனது குடும்பத்தார்கள் தாக்க முற்பட்டபோது தவறுதலாக என்மீது பட்டு எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 262/2022** |
| Deposition of witness for | :: | **PW. 2** |
| Name | :: | **முத்துக்குமார்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**1, 2 எதிரிகள் இறப்பு. 3, 4 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 07.04.2026**

**முதல் விசாரணை**:

1. நான் பாலவநத்ததில் குடியிருந்து ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் என்னை அடித்தார்கள், அப்போது அவர்களை தெரிந்து கொண்டேன். கடந்த 24.02.2021ம் தேதி செல்வக்குமார் குடித்துவிட்டு வந்து எனது வீட்டில் பிரச்சனை செய்தார். " எனக்கும் எனது அப்பாவிற்கும் இடையே நீ ஏன் வருகிறாய் " என்று செல்வக்குமார் என்னிடம் கேட்டார். அப்போது அசிங்கமாக பேசினார். என்னை பார்த்து செல்வக்குமார் "ஓத்தா புண்டை, சுன்னி புளுத்தி, கொன்னுடுவேன், எரிச்சிடுவேன் என்று அசிங்கமாக திட்டி மிரட்டினார். அதன்பின்னர் எனது அண்ணன் குருசாமி மற்றும் எனது பெரியப்பா லட்சுமணன் ஆகியோர் வந்து விலக்கிவிட்டார்கள். பின்னர் நாங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டோம்.

2. மறுநாள் காலையில் நான் சாப்பிடுவதற்காக வெளியே சென்றிருந்தேன். திரும்பி எனது வீட்டிற்கு வரும்போது காலை சுமார் 08.30 அல்லது 08.45 மணி இருக்கும், அப்போது திடீரென்று நான்கு பேர் சேர்ந்து என்னை பிடித்து கொண்டார்கள். இரண்டு பேர் என்னை அடித்தார்கள். ஆஜர் எதிரிகள் இருவரும் தான் என்னை அடித்தார்கள்.

மற்ற 4 நபர்கள் என்னை கை மற்றும் கால்களை நகரவிடாமல் பிடித்து கொண்டார்கள். ஆஜர் எதிரிகள் இருவரும் கட்டையால் என்னை நெஞ்சிலும், தலையிலும், இடது கையிலும் அடித்தார்கள். சண்டையை விலக்கிவிட வந்த எனது பெரியப்பாவான லட்சுமணனை அடித்து அவரது வலது கை பெருவிரலை உடைத்துவிட்டார்கள். எனது பெரியப்பா மயங்கிவிட்டார். அதனால் அவரை அழைத்து கொண்டு விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். எனது மதினி முத்து சண்டையை விலக்கிவிட வந்தபோது அவரை ஆஜர் எதிரிகள் இருவரும் அடித்தார்கள். எதிரி முத்துமாணிக்கம் எனது மதினியை பிடித்து கீழே தள்ளி தலையிலும் கையிலும் கட்டையால் அடித்தார்.

3. அதன்பின்னர் நான், எனது பெரியப்பா, எனது மதினி ஆகியோர்கள் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். போலீசார் என்னை இரண்டு நாட்கள் கழித்து விசாரணை செய்தார்கள்.

**3, 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சண்டையை விலக்கிவிட வந்த எனது பெரியப்பாவான லட்சுமணனை அடித்து அவரது வலது கை பெருவிரலை உடைத்துவிட்டார்கள் என்று நான் முதல் விசாரணையில் கூறிய விவரத்தை போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனது பெரியப்பா மற்றும் மதினி ஆகியோர்கள் எனக்கு காயம்பட்ட பிறகு தான் வந்தார்கள் என்றால் என்னை அடித்து கொண்டிருக்கும்போது ஐந்து நிமிடங்களில் வந்தார்கள். காயம்பட்ட உடன் நான் மயங்கிவிட்டேன் என்றால் சரியல்ல, நான் மயங்கவில்லை. செல்வக்குமார் என்னை தாக்கினாரா என்றால் இல்லை, செல்வக்குமாரும், சந்துருவும் எனது கைகளை பிடித்து கொண்டார்கள். சந்துரு எனது கையை பிடித்து கொண்டதாக நான் கூறும் விவரத்தை போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான், என்னிடம் கேட்கவில்லை அதனால் சொல்லவில்லை.

2. நானும், எனது குடும்பத்தார்களும் செல்வக்குமாரை தாக்க முற்பட்டபோது தவறுதலாக என்மீது கம்பு பட்டு எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. செல்வக்குமாருக்கும் எனக்கும் தான் பிரச்சனை என்றாலும் ஆஜர் எதிரிகள் ஒருபோதும் என்னிடம் பிரச்சனை செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**